# கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்

வாழ்க்கையிலே போராட்டங்கள் உண்டு. ஒருவேளை அவை ஒன்றின் பின் ஒன்றாக வரலாம். வீட்டிலே, படசாலையிலே, வேலை செய்யும் இடங்களிலே பிரச்சனைகள் உண்டாகலாம். பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் இடத்திலே கருத்து முரண்பாடுகள், குழப்பங்கள், பிரிவினைகள் அவ்வப்போது உண்டாகலாம். இவைகள் எல்லாவற்றின் மத்தியிலும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள். இந்த செய்தியை தேவ ஊழியராகிய பவுல், பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்திலே வலியுறுத்திக் கூறுவதை காணலாம். அதனால் குறைகளை அப்படியே பாராமுகமாக விட்டு விடும்படியாக கூறவில்லை.

**பிலிப்பியர் 3:1**

**மேலும், என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்.**

நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை, ஏற்ற சமயத்தில் உதவி செய்யும் கிருபை காலை தோறும் புதிதாக இருக்கின்றது. மரத்தன் ஓட்டப்பந்தைய போட்டியிலே ஓடுகின்றவன், வழியிலே இருக்கும் தடைகளை பற்றி பயந்து, நடுங்கி, சோர்ந்து போகாமல், அவைகளை ஒவ்வொன்றாக தாண்டி வெற்றிப் பரிசை பெறும்படி ஓடுகின்றான். அவன் பாதி வழியிலே நின்று துக்கப்படுவதில்லை. அந்த பரிசு நிச்சயம் என்று அதை நோக்கி ஓடுகின்றான். அதுபோலவே, நாமும் அழைத்தவர் உண்மையுள்ளவர் என்ற விசுவாசத்தை தளரவிடாமலும், அவர் பாதி வழியிலே நம்மை கைவிடமாட்டார் என்பதை அறிக்கை செய்கின்றவர்களாவும், விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓட வேண்டும். நாம் செய்ய வேண்டியது இன்னதென்று நமக்கு போதிக்கும் சத்திய ஆவியானவர் நம்மோடு இருக்கின்றார். அவர் கண்டித்துணர்த்தி, நம்மை சகல சத்தியத்திலும் வழிநடத்திச் செல்வார். எனவே, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள். கர்த்தருக்குள் சந்தோஷமாக இருப்பது, விசுவாசிகளின் உறுதியான விசுவாசத்தை வெளிப்படுத்தும் கனியாக இருக்கின்றது. இந்த செய்தியை தேவ ஊழியராகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்திலும், மற்றய நிருபங்களிலும் திரும்ப திரும்ப குறிப்பிடுகின்றார். எனவே நீங்களும் உங்கள் வாழ்க்கையிலே உண்டாகும் பாடுகள், உபத்திரவங்கள், சோதனைகள் மத்தியிலே சோர்ந்து போகாமல், கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்.

**ஜெபம்**: நித்திய வாழ்விற்கென்று என்னை அழைத்த தேவனே, குறைவுகள் மத்தியிலே நான் சோர்ந்து பின்னிட்டு போகமல், உமக்குள் சந்தோஷமாக இருக்க எனக்கு பிரகாரமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# 'அறிந்த பிரசங்கங்கள்'

**பிலிப்பியர் 3:1**

**எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும்.**

பெற்றோர், தங்கள் பிள்ளையானவன் பாடசாலைக்கு செல்ல ஆரம்பிக்கும்போது, பாடசாலையிலே எப்படி நடந்து கொள்ள வேண்டும். குறித்த இடைவேளைகிலே சிற்றுண்டிகளை சாப்பிட வேண்டும், கொண்டு செல்லும் குளிர்பானங்களை குடிக்க வேண்டும். மதிய உணவை சாப்பிட வேண்டும் என்று தவறாமல் திரும்பத் திரும்ப சொல்லிக் கொடுகின்றார்கள். அவர்கள் வளர்ந்து வாலிபர்களாக வந்த பின்பும், அவர்கள் கொண்டு சென்ற உணவை சாப்பிட்டார்களா என்று தாயார் விசாரிப்பாள் அல்லவா! சில வேளைகளிலே, பிள்ளையானவனுக்கு அதைக்குறித்து விரும்பம் இல்லாதிருக்கலாம். நான் வளர்ந்து விட்டேன், ஏன் எனக்கு திரும்ப திரும்ப இதை ஞாபகப்படுத்துகின்றீர்கள் என்று கூறிக் கொள்வான். அப்படியிருந்தும், ஏன் தாயானவள், தன் பிள்ளையை விசாரிக்கின்றார்கள். ஏன் திரும்ப திரும்ப ஒரே காரியத்தை குறித்து கேட்கின்றாள்? சற்று சிந்தித்துப் பாருங்கள். அது போலவே, இந்த உலகத்திலே விசுவாசிகளை வஞ்சிக்கும்படி பிசாசானவன் சுற்றித்திரிகின்றான். ஆதியிலே இருந்து ஒரே விதமான வஞ்சிக்கும் யுக்தியையே அவன் செய்து வருகின்றான். “அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.” எனவே, அவைகளிலிருந்து தப்பிக்கொள்ளும்படி, தேவ ஆலோசனைகளை, எச்சரிப்புக்களை திரும்ப திரும்ப சொல்ல வேண்டியிருக்கின்றது. இன்று சில விசுவாசிகள் வேதத்தை ஆழமாக கற்றுக் கொள்ள வேண்டும் என்று சத்திய வேதத்தின் அடிப்படை அம்சங்களை மறந்து போய்விடுகி ன்றார்கள். சில வேளைகளிலே “என்ன பிரசங்கம் ஒரே மாதிரித்தான் போகின்றது. இந்த செய்தியை எத்தனை முறை கேட்டுவிட்டோம்” இப்படியாக கூறி, சில வேளைகளிலே தங்கள் செவிகளை அடைத்து, இருதயத்தை கடினப்படுத்திக் கொள்கின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, தேவ ஊழியராக பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தின் 3ம் அதிகாரத்திலே, “எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும்.” என்று குறிப்பிட்டிருக்கின்றார். எனவே, பழைய பிரசங்கம் என்று கூறி, வேதத்திலுள்ள ஆலோசனைகளை மறந்து, பழைய பாவங்களை பாரா முகமாக விட்டு விடாதிருங்கள். சத்திய ஆவியனாவருக்கு இடங்கொடுங்கள். அவர் உங்களை சகல சத்தியத்திலும் வழிநடத்தி செல்வார்.

**ஜெபம்**: ஆலோசனையின் தேவனே, முன்னர் கற்றுக் கொண்டவைகள், பழைய பாடங்கள் என்று கூறி, வாழ்வின் அடிப்படை அம்சங்களை மற ந்து விடாமல், வேததத்தின் ஆலோசனைகள் ஏற்று அதன்படி வாழ என க்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நோக்கம் ஒன்றே!

பிதாவாகிய தேவனின் இரட்சிப்பின் வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் சமீபமானபோது, "அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம்பண்ணினான்.". இவன் கர்த்தருக்கு வழியை ஆயத்தம்பண்ணும்படியான வந்தான். மேலும், யோவான் ஸ்நானன் கூறுகையில்: நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன் நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர் அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்று வாக்களிக்கப்பட்ட மெசியாவாகிய இயேசுவை குறித்து சாட்சி பகர்ந்தான். ஆண்டவராகிய இயேசு யோவான் ஸநானனினால் ஞானஸ்நானம் பெற்ற பின்பு, "அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.". மேலும் ஆண்டவராகிய இயேசு கூறிய சில வார்த்தைகளை பார்ப்போம்: "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்." மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" இந்த வார்த்தைகள் யாவும் ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திற்கு வந்த நோக்கத்தை தெளிவாக வெளிப்படுத்துகின்றது. அதவாது, தம்மை விசுவாசிக்கின்றவல்கள் பரலோக ராஜ்யத்திலே, நித்திய ஜீவனை அடைவதே அந்த நோக்கம். விசுவாசிகளுடைய வாழ்க்கையானது அந்த நோக்கமுடையதாகவே காணப்படவேண்டும். இதைத் திரும்ப திரும்ப ஏன் சொல்கின்றீர்கள்? ஏன் ஞாபகப்படுத்த வேண்டும் என்று எந்த விசுவாசியும் சொல்லிக் கொள்ள கூடாது. ஏனெனில் நம்முடைய நோக்கம் ஒன்றே! பரலோக ராஜ்யத்திலே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும்.

**யோவான் 10:28**

**நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை,**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, எந்த காரணத்திற்காகவும், அந்த மேன்மையான ஒரே நோக்கத்தை நான் இழந்து விடாதபடிக்கு என்னை உம்முடைய வழியிலே வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாசிகளின் பெலன்

“அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.” என்று எபிரெயர் 10ம் அதிகாரம் 23ம் வசனத்தில் வாசிக்கின்றோம். எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நீங்கள் கர்த்தர்மேல் கொண்ட நம்பிக்கையிலே உறுதியாய் இருப்பீர்கள்? உபத்திரவங்கள், இழப்புக்கள், நிந்தனைகள், துன்பங்கள், வேதனைகள் போன்ற சூழ்நிலைகளிலே, அழைத்தவர் உண்மையுள்ளவர் என்ற நம்பிக்கையிலே நாம் உறுதியாக தரித்திருக்க இருக்க வேண்டும். அப்படியானால், வாழ்க்கையிலே போராட்டங்கள் தலைதூக்கும் போதும், சோதனைகளை மேற்கொள்ள பெலனற்றுப் போகும் வேளைகளிலும், குற்றம் செய்து மனம்நொந்துஒடுங்கிப்போயிருக்கும் சந்தர்பங்களிலும் என்ன செய்வீர்கள்? பாவம் உங்களை மேற்கொள்ளும்படிக்கு துக்கத்திலேயே மூழ்கியிருப்பீர்களா? சத்திய வேதத்தை வாசிக்கும் போது, பாவத்தைக் குறித்து மனதிலே குத்துண்டு, மனதில் தோன்றும் குற்ற உணர்வுகள் உங்கள் வாழ்க்கையை மேற்கொள்ளும்படிக்கு சோர்ந்து போய், வாழ்விழந்தவர்களை போல இருப்பீர்களா? குற்ற உணர்வு, மனம் வருந்தி, மனம் திரும்புதலுக்கேதுவான துக்கம் நல்லது. “தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது.” ஆனால், ஒரு விசுவாசியானவன், துக்கமானது தன் வாழ்க்கையை மேற்கொள்ளும்படி இடங் கொடுக்கும்போது, அவன் தன் நம்பிக்கையின் அறிக்கையிலே உறுதியற்றவனாக மாறிவிடுகின்றான். அந்த வேளைகளிலே, மேலும் தவறான தீர்மானங்கள் எடுக்கக்கூடிய சந்தர்ப்பம் உண்டாகி விடுகின்றது. பாவங்களை அறிக்கை பண்ணும்போது, இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன், அதை மன்னித்து மறந்து விடுவார் என்ற நம்பிக்கையை இழந்து விடக்கூடாது. “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.” எனவே அழைத்தவர் உண்மையுள்ளவர் என்ற நம்பிக்கையிலே சோர்ந்து போகாமல், கர்த்தருக்குள் சந்தோஷமாக இருங்கள். அவரைக் குறித்த சந்தோஷம் விசுவாசியின் பெலனாக இருக்கின்றது.

**ரோமர் 12:12**

**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்.**

**ஜெபம்:** என் பெலனாகிய கர்த்தாவே, உம்மைக் குறித்த நம்பிக்கையிலே நான் தளர்ந்து போகமல், அசைவில்லாமல் உறுதியாய் இருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நல்ல ஔஷதம்

ஒரு பாடசாலையிலே கல்வி கற்று வந்த மாணவனொருவன், பாடங்களை ஒழுங்காக கற்றுக் கொடுக்கும் ஆசிரியயொருவருக்கு விரோதமான காரியத்தை செய்து விட்டான். உண்மையான தன்னை நேசித்து, நெறிப்படுத்தும், ஆசிரியருக்கு துரோகம் செய்தேன் என்று வெகுவாய் துக்கமடைந்தான். அவனுடைய நல்லமனதைக்குறித்து பலரும் மெச்சினார்கள். சுத்தமனசாட்சியிலே உண்டாகும் இந்த உணர்வு அவனுக்கு நல்லது. ஆனால், அடுத்த கட்டமாக அவன் செய்ய வேண்டிய காரியத்தை செய்யாமல், எவ்வளவு காலம் அவன் அந்த துக்க உணர்விலேயே இருக்க வேண்டும்? அவன் அப்படியே இருந்தால், அவன் தன் காலத்தில் கற்ற வேண்டிய பாடங்களிலே பின்னடைவு ஏற்படும் அல்லவா? ஒருவேளை, தன் துக்கத்தை ஆற்ற, தவறான பழக்கங்களுக்குள் சென்று விடக்கூடும் அல்லவா? எனவே துக்கத்திலேயே மூழ்கியிருக்காமல், தன்னை நேசிக்கும் ஆசிரியரிடம் செல்ல வேண்டும். சென்று தான் செய்த தவறை ஏற்றுக் கொண்டு. மன்னிப்பை பெற்ற கொள்ள வேண்டும். தன்னை ஆசிரியர் தன்னை மன்னித்து, ஒருவேளை கண்டித்து ஏற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கையிலே உறுதியாய் இருக்க வேண்டும். இது இந்த உலகத்திலே மனிதர்கள் மத்தியிலே நடக்கக்கூடிய நன்மையான காரியமாக இருக்கின்றது. அப்படியானால், நம்முடைய பரம பிதா எத்தனை நல்லவர் என்று எண்ணிப்பாருங்கள். “தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர் அவரே எழுந்துமிருக்கிறவர் அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர் நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.” (ரோமர் 8:32-34) அது மட்டுமல்ல, வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். (எபிரெயர் 4:14). எனவே பாதி வழியிலே சோர்ந்து போய்விடாமல், கிருபாசனத்தண்டையிலே தைரியத்தோடு சேரும் பாக்கியத்தை பெற்றிருப்பதால், கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்.

**நீதிமொழிகள் 17:22**

மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்.

**ஜெபம்**: இரக்கங்களின் பரம தகப்பனே, உம்முடைய இரகங்களுக்கு முடிவில்லை என்ற சத்தியத்தை அறிந்து உணர்ந்து, எப்போதும் உம்மை அண்டிக் கொள்ளும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை எனக்கு தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எந்த அறிவிலே பெருக வேண்டும்?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசியானவன், குற்றம் ஒன்றில் அக ப்பட்டதால்,அநேகர் முன்னிலையிலேஅவமானத்திற்குள்ளானான். அவன் மனதிலே தாங்க முடியாத வேதனை. அவன் செய்த குற்றத்தின் தார்ப ரியத்தையும், பின்விளைவுகளையும் குறித்து, மற்றவர்கள் அவனுக்கு சொன்னார்கள். அவர்கள் சொ ன்ன வார்த்தைகள் உண்மை. அந்தக் குற்றத்தினால் இனி அவனுக்கு வரவிருக்கும் இழப் புக்களை குறித்து, சம்மந்தப் பட்டமூப்பர்கள் அவனுக்கு கூறி னார்கள். அவர்கள் தங்கள் பொறுப்புக்களை நீதி நியாய ஒழுங்கின்படி செய்தார்கள். இரவு நேரங்களில், நித்திரைய ற்றவனாக படுக்கையை கண்ணீரால் நனைத்த நாட்கள் உண்டு. தன் குற்றத்தைக் குறித்து அதிககதிகமாக சிந்தித்துக் கொண்டிருந்தான். குற் றத்தின் அகோரம் எவ்வளவு என்ற அறிவிலே பெருகினான். ஒருநாள் அவனுடைய மேய்ப்பனாவர் அவனை சந்தித்துப் பேசினார். அனுப வத்திலே தேறின அவர், அவனை நோக்கி: மகனே, பாவத்தின் அகோ ரம் பெரிது. தேவனுடைய இரக்கம் அதைவிட பெரிது. பாவத்தை அறி யும் அறிவிலே வளர்ந்து பெருகுவதைவிட, தேவனையும், அவருடைய அன்பின் வல்லமையின் அறிவிலும் நீ வளர்ந்து பெருக வேண்டும். பாவத்தினால் உனக்கு உண்டாகக்கூடிய அதி கூடிய தண்டனை் மரணம். அந்த மரணத்தின் கூரை ஆண்டவர் இயேசு உடைத்தார். அவருடைய கிருபையின் அதி உயர்ந்த பலன் மரணத்தினின்று உன்னை விடுவித்து, பரலோகத்திலே நித்திய ஜீவனை உனக்குத் தருவதாகும். குமாரனா கிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். எனவே பாவத்தையும் அதனால் உண்டாகும் தண்டனை யையும்குறித்த அறிவில் வளர்வதைவிட அதிகமாக தேவனையும், அவ ருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து வழியாக உண்டாகும் நித்திய ஜீவனைக் குறித்த அறிவிலே வளர்ந்து பெருகு என்று ஆலோசனை கூறி னார்.நித்திய வாழ்விற்கென்று அழைக்கப்பட்ட பிரியமான சகோதர சகோ தரிகளே, உங்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகளால் உண் டாகும் பயங் கரங்களை கண்டு, மருண்டு போகாதிருங்கள். உங் களை அழைத்த தேவன் சர்வ வல்லமையுள்ளவர். அவருடைய கிருபை என்றுமுள்ளது. பயங்கரங்களை குறித்து தியானிக்காமல், தேவனையும், அவ ருடைய அன்பின் வல்லமையும் குறித்து தியானித்து, அவரிடத்திலே சேருங்கள்.

**ரோமர் 6:23**

**பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித் தியஜீவன்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பிய உம்முடைய திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அறிகின்ற அறிவிலே வளர என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எச்சரிப்பின் சத்தம்!

பிலிப்பியருக்கு எழுதிய முதல் இரண்டு அதிகாரங்களிலும், வாழ்த்துக்கள், நிறைவுகள், எச்சரிப்புக்கள், குறைவுகளைக் குறித்து தேவ ஊழியராகிய பவுல் எழுதியிருக்கின்றார். வாழ்த்துக்கள், நிறைவுகள் மனதிற்கு இனிமையானவைகள். ஆனால், எச்சரிப்புக்களையும், குறைவுகளையும் குறித்து பேசும் போது, விசுவாசிகள் சோர்ந்து போய்விடுகின்றார்கள். குறிப்பாக எச்சரிப்புகள் மனதிலே பயத்தை உண்டு பண்ணிவிடும். ஆதலால், அப்போஸ்தலராகிய பவுல் மட்டுமல்ல, மற்ற அப்போஸ்தலர்களும், என்னதான் நடந்தாலும், கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்க வேண்டும், கவலையிலே மூழ்கிப் போய்விடக் கூடாது என்று இடையிடையே கூறியிருக்கின்றார்கள். மூன்றாம் அதிகாரத்தின் ஆரம்பத்திலே கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்கும்படி திரும்பக் கூறிய தேவ ஊழியராகிய பவுல், அடுத்த வசனங்களிலே சபையோர் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய காரியங்களைக் குறித்து கூறுகின்றார். ஏனெனில், கோணலும் மாறுபாடுமான சந்ததி நடுவிலே, வஞ்சிக்கின்றவர்கள் மத்தியிலே விசுவாசிகள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். சில இடங்களிலே, சபைக்குள்ளும் வஞ்சிக்கின்றவர்கள் இருக்கின்றார்கள் என்பதை விசுவாசிகள் மறந்து போய்விடுகின்றார்கள். விசுவாசிகள் சபைக்குள் இருந்தாலும், சபைக்கு வெளியே இருந்தாலும், வேதம் கூறும் ஆலோசனைகளை மறந்து போய்விடக்கூடாது. சிலர் வேதத்திலுள்ள எச்சரிப்புக்களை மறந்து, தங்கள் உணர்வின்படி கிரியைகளை நடபிக்க முயற்சிக்கும்போது, சறுக்கி விழுந்து விடுவதால், சபைக்குள் பல பிரச்சனைகளை ஏற்படுத்திவிடுகின்றார்கள். சபைக்கு வெளியே தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட இடம் கொடுகின்றார்கள். ஏச்சரிப்புகளைப் பற்றி கூறும் இடங்களிலே, விசுவாசிகள் அன்பை மட்டுமல்ல, அன்போடு பரிசுத்தத்தைக் குறித்து எண்ணமுள்ளவர்களாக இருக்க வேண்டும். சிலர் ஆலோசனைகளுக்கு எதிர்த்து நின்று, எல்லாருக்கும் அன்பு காட்ட வேண்டும் என்று வஞ்சக வலைக்குள் சிக்கிவிடுகின்றார்கள். எனவே, வேதத்திலே கூறப்படும் எச்சரிப்புக்களை அற்பமாக எண்ணாதிருங்கள். சோர்ந்து போய்விடாதிருங்கள். பயம் உங்கள் இருதயங்களை ஆட்கொள்ள விடாமல், தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருங்கள்.

**சங்கீதம் 32:8**

**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன் மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.**

**ஜெபம்:** நான் நடக்க வேண்டிய வழியை எனக்கு போதித்தி நடத்தி ஆலோசனை தரும் தேவனே, தேவ ஆலோசனைகளை நான் அற்பாக எண்ணாமல், உம்முடைய வார்த்தையின் வழியிலே நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சுயாதீனத்திலே நிலைத்திருங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவன், சூழ்நிலைகள் காரண மாக, தன் வாலிப வயதிலிருந்து துன்மார்க்க வழியிலே வாழ்ந்து வந் தான். ஒன்றின் பின் ஒன்றாக, அவன் குற்றங்களை செய்து தப்பிக் கொண்டான் ஆனால், ஒரு நாள், அவன் கையும் மெய்யமாக பெருங் குற்றத்திலே அகப்பட்டதால், அநேக ஆண்டுகளுக்கு சிறைத் தண்ட னையை பெற்றுக் கொண்டான். அந்த தண்டனை மிகவும் கடுமையாக இருந்தது. சில ஆண்டுகளுக்கு பின் னர், நாட்டின் சுதந்திர தினத்தன்று, நாட்டின்ஜனாதிபதி,அவனுக்கு பொது மன்னிப்பை கொடுத்து, எந்த அபராத மும்இன்றி, அவனை விடுதலை செய் தார். அவன் பெற்றுக் கொண்ட விடு தலையை அவனுக்கே நம்ப முடி யாமல் இருந்தது. “இதற்கு பரிகார மாக நான் என்ன செய்ய வேண்டும்” என்று கேட்டான். நீ இந்த விடு தலைக்கென மேற்கொண்டு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. நாட்டின் நல்ல குடிமகனாய் இரு. ஆனால், இனிமேல் குற்றம் செய்யாதபடிக்கு, எச்சரிக்கையாயிரு என கூறினா ர்கள். அவனோ, தன் ஊருக்கு சென்று, தான் செய்த குற்றத்திற்கு தான் ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும் என்று தன் உடலை வருத் தினான். இன்னும் பற்பல கஷ்டங்களுக்குள் தன்னை உட்படுத்திக் நாட்களையும் நேரங்களையும் விரயப்படுத்தி வந் தான். இலவசமாக கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு நீதிமான் களாக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, மேற்கூறிய சம்பவத்திலே அந்த மனிதனுடைய கிரியைகளைக் குறித்து நீங்கள் என்ன கூறுவீர்கள்? அதுபோலவே, அந்நாட்களிலே, ஆண்டவராகிய இயேசுவினால் உண் டான இரட்சிப்பை பெற்றவர்கள், மறுபடியும் தங்கள் உடலை வருத்த வேண்டும், விட்டு வந்த மதக்கிரியைகளை செய்ய வேண்டும் என்று சிலரால் நிர்பந்திக்கப்பட்டார்கள். எடுத்துக்காட்டாக, இரட்சிப்படைந்தவர் கள், யூதமதத் தின் முறைமையின்படி, தேவன் முன்னிலையிலே ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு, மறுபடியும் சரீரத்திலே விருத்தசேதனம் செய்ய வேண்டும் என்று தவறாக போதித்து வந்தார்கள். இப்படிப்பட்ட பொய் யான போதகர்கள் ஆண்டவர் இயேசுவின் சிலுவை மரணத்தை அற் பமாக எண்ணுகின்றவர்களாகவும், தாங்கள் விட்டுவிட்ட பழைய வாழ்க்கை முறைமைக்கு மற்றவர்களை திரும்பப் பண்ணுகின்றவர்களாகவும் இருந் தார்கள். இன்றும் இருக்கின்றார்கள். அவர்களுடைய போத னைகளை குறித்து விசுவாசிகள் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**கலாத்தியர் 5:1**

**கிறிஸ்து நமக்கு உண்டா க்கின சுயாதீன நிலைமை யிலே நிலைகொண்டிருங் கள்.**

**ஜெபம்**: விலைமதிக்க முடியாத இயேசுவின் இரதத்தினாலே எனக்கு மீட்பு உண்டாக்கிலே தேவனே, நான் மறுபடியும் பலனற்ற பழைய மதக்கிரியைகளுக்கு திரும்பாமல், தூய வாழ்வு வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நிதானித்து அறிந்து கொள்ளுங்கள்

நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று தேவ ஊழியராகிய பவுல் கூறியிருக்கின்றார். இந்நாட்களிலே பலர் நாய்களை வீட்டின் செல்லப் பிராணியாக வளர்க்கின்றார்கள். புதிய இனங்களை உருவாக்கப்படுகின்றது. வீட்டில் வைத்திருப்பதற்கு பற்பலபயிற்சிகள் அளிக்கப்படுகின்றது. ஆனால், "அந்நாட்களிலே, நாய் கள், பொதுவாக வனவிலங்குகளாக கருதப்பட்டிருந்தது. மனிதர்களை காணும் போது அவை அவர்களை தாக்குவதற்கும், ஆகாரத்திற்காக கடி த்து, சண்டை செய்யும் மிருகமாக வும் இருந்ததாக கூறப்படுகின்றது" "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்கு போடுவது நல்லதல்ல" என்றும் ஐசுவரியவான், லாச ருவின் சம்பவத்திலே, நாய்கள் வந்து லாசருவின்பருக்களைநக்கிற்று என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். கருப்பொருளாவது, அந் நாட்களிலே நாய்கள் பொதுவாக மனிதர்களோடு நட்புள்ள பிராணியாக கருதப்படவில்லை என்று கூறப்ப டுகின்றது. இந்த கருத்தானது சரித்திர ஆய்வாளர்களின் தரவுகள் ஆகும். நான் ஒரு சரித்திர ஆய்வாளர் அல்ல. ஆனால், வேதத்திலே நாய்களுக்கு ஒப்பனையானவர்களை குறித்து தெளிவாக கூறப்பட்டிரு க்கின்றது. "நாய் கக்கினதை தின்னவும் கழு வப்பட்ட பன்றி சேற்றுக்கு திரும்பினது" என்று 2 பேதுரு 2:22லும், "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதிருங்கள், உங்கள் முத்து க்களை பன்றியின் முன் போடாதேயுங்கள், போட்டால் தங்கள் கால்க ளால் அவைகளை மிதித்து, திரு ம்பிக்கொண்டு உங்களைப் பீறிப் போடும்" (மத்தேயு 7:6) என்றும் வேதம் தெளிவாக கூறுகின்றது. அதா வது, தாங்கள் விட்டுவந்த பழைய மாம்ச சுபாவங்களுக்கு திரும்பு கின்றவர்கள், தங்கள் பழைய பராம்பரிய மதக்கிரியைகளை விட்டுவிட மனதில்லாதவர்கள், பரிசுத்தமானதை அற்பமாக எண்ணுகின்ற வர்களை குறி த்து எச்சரிக்கையாக இருங்கள் என்று தேவ ஊழியராகிய பவுல் அறிவுரை கூறுகின்றார். அவர்களை அன்பு செய்ய வேண்டும் என்று அவர்களோடு நீங்கள் ஐக்கியப்பட்டால், நாளடைவிலே, உங்களையும் அவர்கள் தேவ காரியங்களிலே சமரசம் செய்ய வைப்பார்கள். எனவே, நம்பிக்கையிலே சந்தோஷமாக இருக்கும் நீங்கள், வேதத்திலே கூறப்பட்டிலுக்கும் எச்சரிப்புக்களையும், ஆலோசனைகளையும் அற்ப மாக எண்ணாமல் பின்மாற்ற காரரைக் குறித்து எச்சரிக்கையுள்ள வர்க ளாக இருங்கள்.

**1 தெச 5:21**

**எல்லாவற்றையும் சோதித் துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** வழிநடத்தும் தேவனே, கோணலும் மாறுபாடுமான உலகிலே, சகல காரியங்களையும் ஆராய்ந்து பார்த்து, நலமானவைகளை பற்றிக் கொள்ளும்படி எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வஞ்சகத்திற்குட்படாதிருங்கள்

ஒரு மனிதனானவன், மாலை நேரம் தன் வேலையை முடித்த பின்பு, தெரு வோரமாக பஸ் வண்டிக்காக காத்துக்கொண்டிருந்தான். அந்த வேளை யிலே, அவ்வழியாக வந்த வாலிபனொருவன், ஒரு விலையுயர்ந்த கை கடிகாரத்தை அந்த மனிதனுக்கு காட்டி, அதைக் குறைந்த விலைக்கு விற்க போவதாக கூறினான். அதன் விலையை நிரூபிக்கும்படிக்கு அதன் பற்றுச்சீட்டையும் காண்பித்தான். அந்த வாலிபனானவன் பார் வைக்கு மிகவும் ஒழுக்கமுள்ள வனும், பேச்சிலே சாந்தமுள்ள வனாகவும் இருந்தான். அந்த கைகடிகாரத்தின் பட்டி தங்கம் பூசப்பட்டது என்று கூறினான். அந்த கைகடிகாரமும் பார்வை க்கு மிகவும் அழகாக காட்சிய ளித்தது. அதனால், அந்த மனித னானவன், சந்தோஷத்தோடே அக் கைகடிகாரத்தை விலை கொடுத்து வாங்கினான். வீடு சென்ற பின்பு, அந்த கைகடிகாரம் பழுதடைந்ததென்றும், போலியான தங்கம் என்றும் அறிந்து கொண்டான். இந்த உலகிலே போலியானவை களை உண்மையானவைகளாக காண்பித்து மற்றவர்களை ஏமாற்றுகி ன்றவர்கள் இருக்கின்றார்கள். ஒருவன் போலியாதை உண்மையானது என்று மற்றவர்களை வஞ்சிப்பதற்கு உண்மையானதைக் குறித்த தரவு களை அறிந்திருக்க வேண்டும். விசுவாசிகளை தங்கள் சுய இலாபத் திற்காக வஞ்சிக்கின்றவர்கள் அன்றும் சபைகளிலே இருந்தார்கள். இன் றும் இருக்கின்றார்கள். இவர்கள் ஒரு கால கட்டத்திலே விசுவாசிகளாக இருந்து, தங்கள் மாம்ச இச்சைககளுக்கு இடங்கொடுத்து பின்மாற்ற மான வாழ்க்கைக்கு திரும்பினவர்களாக இருக்கலாம் அல்லது ஆரம்ப த்திலிருந்தே விசுவாசியைப் போல தங்களை காண்பிக்கின்றவர்களாக இருக்கலாம். பொதுவாக இவர்கள் நன்மை செய்கின்றவர்களாகவும், பாவத்திலே விழுந்தவர்காக வழக்காடுகின்றவர்களாகவும் தங்களைக் காண்பித்துக் கொள்வார்கள். பொதுவாக இவர்கள், தீமையான வித்து க்களை விசுவாசிகளின் மனதிலே விதைக்கின்றவர்களாக காணப்படு வார்கள். அதை பார்த்தால் என்ன குற்றம்? அங்கே போனால் பரிசுத்தம் குறைந்து விடுமோ? இதை கேட்டால் என்ன? என்று உலக போக்கோடு ஒத்துப் போகின்றவர்களாகக் காணப்படுவார்கள். ஆதியிலே சர்ப்பமா னது ஏவாளை வஞ்சித்தது போல, உங்களையும் வஞ்சிக்காதபடி பொல் லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாக இருங்கள்.

**2 கொரிந்தியர் 11:3**

**ஆகிலும், சர்ப்பமானது தன்னு டைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மன தும் கிறிஸ்துவைப்பற்றிய உண் மையினின்று விலகும்படி கெடு க்கப்படுமோவென்று பயந்திருக் கிறேன்.**

**ஜெபம்:** சத்திய வழியிலே என்னை நடத்தும் தேவனே, உம்முடைய சத்தி ய வார்த்தையிலே நிலைநின்று, இந்த உலகிலே கிரியை செய்து வரும் வஞ்சகத்தின் ஆவிகளை நிதானிதறிய எனக்கு உணர்வுள்ள இருத யத்தை தந்துவழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பொல்லாத வேலையாட்கள்

என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கின்றான் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். ஆண்டவர் இயேசுவோடு சேர்க்கும் உண்மையும் உத்தமுமான வேலையாட்கள் இருக்கின்றார்கள். அதே வேளையிலே, ஆண்டவர் இயேசுவைவிட்டு பிரித்து, தங்களோடு தக்க வைக்க முயற்சி செய்யும் பொல்லாத வேலையாட்களும் இருக்கின்றார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். இவர்கள் தங்கள் மாம்ச இச்சையை நிறைவேற்றும்படி மந்தைகளை பட்சிக்கின்ற ஓநாய்களுக்கு ஒத்திருக்கின்றார்கள். பரலோகத் திலே உங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். ஆனால், இவர்களோ, இந்த பூவுலகத்திலே பொக்கிஷங்களை தங்களுக்கென்று சேர்த்து வைக்கின்றவர்களாக காணப்படுவார்கள். ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கின்றது. எனவே இடுக்கமான வாசல் வழியாய் உட்பிர வேசியுங்கள் என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். ஆனால், பொல்லாத வேலையாட்களோ, கேட்டுக்கு போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது: அதின் வழியாய் விசுவாசிகளை பிரவேசி க்கிக்க பண்ணுகின்றார்கள். நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந் தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கமாக உங்கள் மனம் புதிதாகிறதிாலே மறுரூபமாகுங்கள் என்று வேதம் கூறியிருக்க, இவர்கள் ஜனங்களை கவரும்படிக்கு உலகத்தின் நடை, உடை, பாவனைகளை சபைக்குள் கொண்டு வருகின்றார்கள். பிதாவாகிய தேவனின் சித்தத்தை செய்யாமல், தங்கள் சொந்த கனவுகளை பின்பற்றும்படி பிரசங்கிக்கின்றார்கள். பிதாவின் சித்தத்தை செய்யாதவர்களை நோக்கி: நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார்.

**மத்தேயு 7:21**

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

**ஜெபம்:** பரலோக பிதாவே, இந்த பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து நான் பின்னிட்டு திரும்பாமல், உம்முடைய திருச்சித்தத்தை என் வாழ்விலே நிறைவேற்றி முடிக்க எனக்கு பெலன் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சோதித்தறியுங்கள்!

பொல்லாத வேலையாட்களுக்கு ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்? அவர்கள் பொல்லாதவர்கள் என்றால், விசுவாசிகள் அவர்களோடு ஐக்கியமாக இருக்க மாட்டார்கள். அவர்களை தங்கள் எல்லைக்குள் வர இடம் கொடுக்க மாட்டார்கள். அவர்களிடம் தங்கள் தனிப்பட்ட பிரச்சனைகளை கூறி அவர்களிடம் ஆலோசனை கேட்க மாட்டார்கள். தங்கள் பிள்ளைகளை அவர்களோடு எந்த விதத்திலும் இடைப்பட விட மாட்டார்கள். அப்படியானால் ஏன் பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் தங்களை தேவனுடைய சித்தத்திற்கு விரோதமானவர்கள் என்று காண்பிப்பதில்லை. பொதுவாக, அப்படிப்பட்டவர்கள் வேதத்தை அறிந்திருப்பார்கள், அழகாக தொகுத்து பேசுவார்கள், வெளியரங்கமான செயற்திட்டங்களை நடப்பிப்பார்கள் ஆனால் அவையொன்றையும் தங்கள் சொந்த வாழ்விலே நடப்பிப்பதில்லை. ஒரு சமயம் ஆண்டவராகிய இயேசு தம்முடைய சீஷர்களையும் நோக்கி: வேதபாரகரும் பரிசயேரும் மோசேயின் ஆசனத்தில் உட்காரர்ந்திருக்கின்றார்கள். ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவற்றையும் கைக்கொண்டு செய்யுங்கள் அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்: ஏனெனில் அவர்கள் சொல்லிகிறார்கள் சொல்லியும் செய்யாதிருக்கின்றார்கள். என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில்: மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவேளை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள் என்றார். இன்றைய நாட்களிலும், இப்படிப்பட்டவர்கள் அநேகராயிருக்கின்றார்கள். தொழிநுட்ப இன்ரநெற் வளர்சியானது, பொல்லாதவர்கள் தங்களை நல்லவர்கள் என்று காண்பித்து, மற்றவர்களுடை இருதயங்களை கவர்ந்து கொள்ள வழி வகுக்கின்றது. இப்படிப்பட்டவர்கள், முதலாவதாக தேவன் சொன்னதை தங்கள் வாழ்க்கையில் செய்யாமல், தேவன் சொல்லாத கிரியைகளை செய்யும்படி தங்களை பின்பற்றுகிறவர்களிடம் கூறுவார்கள். எனவே, வேதத்தை வாசியுங்கள், தியானியுங்கள், சத்திய ஆவியானவரின் வழிநடத்துதலுக்காக, உங்களை தாழ்த்தி ஜெபம் செய்யுங்கள். சத்திய ஆவியானவர்தாமே சகல சத்தியத்திலும் உங்களை வழிநடத்திச் செல்வார்.

**1 யோவான் 4:1**

**நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனாலுண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்க்கை வாழ என்னை வேறு பிரித்த தேவனே, இந்த உலகத்தில் தற்போது கிரியை செய்து வரும் வஞ்சகத்தின் ஆவிகளை நிதானித்தறிந்து, சத்திய வழியிலே நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தாழ்மையோடு சேவியுங்கள்!

மனந்திரும்புதல், மன்னிப்பை கேட்டுக் பெற்றுக்கொள்ளுதல், மன்னிப்பை வழங்குதல், மனம் மறுரூபம் ஆகுதல், வேறு பிரிந்த வாழ்க்கை வாழுதல், மனமாற்றம் கனிகளால் வெளிப்படுத்த படுதல் போன்றவை தங்கள் வாழ்விலே நடைபெற வேண்டும் என்று, தாழ்மையுள்ள இருதயத்தோடு, வேதத்தை கற்றுக் கொள்கின்றவர்கள், ஊக்கமாக ஜெபிக்கின்றவர்கள், உபவாசிக்கின்றவர்கள், தானதர்மங்களை, சுவிசேஷம் சொல்கின்றவர்கள் இருக்கின்றார்கள். இவைகளினாலே ஆத்துமாவுக்கு பலன் உண்டு. ஆனால், மனந்திரும்புதல், மன்னிப்பை கேட்டுக் பெற்றுக்கொள்ளுதல், மன்னிப்பை வழங்குதல், மனம் மறுரூபம் ஆகுதல், வேறு பிரிந்த வாழ்க்கை வாழுதல், மனமாற்றம் கனிகளால் வெளிப்படு த்தபடுதல் போன்றவைகளுக்கு தங்கள் சொந்த வாழ்விலே இடமளிக்காமலும், அதைக் குறித்து எண்ணமில்லாதவர்களாவும், வேதத்தை படித்து பட்டம் பெறுகின்றவர்கள், உபவாசித்து ஜெபிக்கின்றவர்கள், தானதர்மங்களை செய்கின்றவர்கள், சுவிசேஷத்தை அறிவிக்கின்றவர்களும் இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள், தங்கள் மாம்ச கிரியைகளை நிறைவேற்றும்படி, மதக்கிரியைகளை நடப்பிக்கின்றவர்களாக காண்படுவார்கள். பிலிப்பியருக்கு எழுதின நிரூபத்தின் ஆரம்பத்திலே, தவறான நோக்கங்களுக்காக சுவிசேஷத்தை அறிவிக்கின்றவர்களை குறித்து தேவ ஊழியராகிய பவுல் கூறியிருக்கின்றார். ஒரு சமயம் ஆண்டவராகிய இயேசு தேவாலயத்திற்கு ஜெபிக்கும்படி சென்ற பரிசேயனையும், ஆயக்காரனைக் குறித்து ஒரு உவமையைக் கூறினார். பரிசேயன் தான் செய்து வரும் நற்கிரியைகளை பற்றி கூறினான். பாவிகளை கண்டித்தான். வாரத்திலே இரண்டு முறை உபவாசித்து வந்தான். எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுக்கின்றேன் என்று கூறினான். இவைகள் யாவும் ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலே செய்யப்பட வேண்டிய நன்மையான காரியங்கள். ஆனால், இவைகளால் மாத்திரம் ஒருவனும் நீதிமானாக்கப் படுவதில்லை. பெருமையுள்ளவனுக்கு தேவன் எதிர்த்து நிற்கும்போது, அவன் செய்யும் நற்கிரியைகளினாலே அவனுக்கு பலன் என்ன? யார் தேவனை எதிர்த்து வெற்றி வாழ்க்கை வாழ முடியும்? எனவே தேவ வார்த்தைக்கு கீழ்படியாமல் இவைகளை செய்யும்படி போதிக்கின்றவர்களைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**லூக்கா 18:14**

ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

**ஜெபம்:** தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கும் தேவனே, மதக்கிரியைகளினாலே உம்மை திருப்தியாக்க முயற்சிக்காமல், உம்முடைய சித்தம் செய்ய வேண்டும் என்னும் என்னில் பெருகும்படி கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்துவுக்குள் மேன்மைபாராட்டுங்கள்

கிருபையினாலேவிசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டோம். இது விசுவாசிகளின் நீதியின் கிரியைகளினாலே உண்டாகவில்லை. ஒருவனும் பெருமை பாராட்டாதபடிக்கு இது தேவனுடைய ஈவு. இப்படியாக ஆரம்பித்த விசுவாசிகளில் சிலர், பாதி வழியிலே தாங்கள் விட்டுவந்த பாரம்பரிய மதக்கிரியைகளுக்கும், தங்கள் குடும்ப அந்தஸ்துக்கும், சமூக செல்வாக்குக்கும் திரும்பி விடுகின்றார்கள். இரட்சிப்படைந்த நாம், எப்படியாக தேவனுக்குள், தேவனுடைய விருப்பப்படி, அவருடைய திட்டத்தின்படி, கிரியைகளை நடப்பிக்க வேண்டும் என்பதை கடந்த மாதங்களிலே தியானித் தோம். ஆனால், சிலரோ, இரட்சி ப்படைந்த பின்பும், தங்கள் எண் ணப்படி, இலவசமாக பெற்றுக் கொண்ட இரட்சிப்பை இன்னும் மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், தங்கள் வம்ச வழி, கல்வித் தகமைகள், விட்டுவந்த பாரம்பரியக் கிரியைகளை மறுபடியும் செய்து, என்று பற்பல காரியங்களைக் குறித்து மேன்மைபாராட்ட ஆரம்பித்து விடுகின்றார்கள். ஆலயக் கட்டிடத்தற்கு கோபுரம் வைப்பதைப் போல, இரட்சிப்பிற்கு தாங்கள் சிகரம் வைக்க முயற்சிசெய்கின்றார்கள். இப்ப டிப்பட்டவர்கள், ஆண்டவர் இயேசுவினால் உண்டான இரட்சிப்பை அறியாமல், இழுப் புண்டு போகின்றவர்களாக இருப்பார்கள். அந்நாட்களிலே, யூதமார்க்கத்தை சேர்ந்த சிலர், கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்படைந்தால் மட்டும் போதாது, தேவனுக்கு பிரியமாக இருக்கும்படி மோசே வழியாக விதிக்கப்பட்ட மாம்சத்திலுண்டான விருத்தசேதனத்தையும் செய்து கொள்ள வேண்டும் என்று விசுவாசிகளுக்கு உபதேசித்தார்கள். இவர்கள் மாம்சத்திலே நம்பிக்கையுள்ளவர்கள். தங்கள்பழைய மாம்ச கிரியைகளால் தேவனுக்கு பிரியமுண்டாகும்படி போதிக்கின்றவர்கள். "சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டிமனுஷர் தோள்களின்மேல்சுமத்துகிறார்கள் தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்." "மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப்போட்டு, அவர்களும் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்கவிடுகிறதுமில்லை." இவர்களைக் குறி த்து எச்சரிக்கையாயிருங்கள். கிரியைகளைக் குறித்தல்ல, கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுகின்றவர்களாகயிருங்கள்.

**பிலிப்பியர் 3:3**

**ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள பிதாவே, கிறிஸ்து வழியாக இரட்சிப்பை பெற்றுக் கொண்ட நான், உம்முடைய வார்த்தையின்படி நான் பரிசுத்த வாழ்வு வாழ என்னை அர்ப்பணித்து, ஆவிக்குரிய ஆராதனை செய்யும்படி என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

ஒரு விசுவாசியின் தனிப்பட்ட, குடும்ப, சபை வாழ்க்கையிலே ஏற்பட க்கூடிய மனக்குழப்பங்கள், பின்மாற்றங்கள் போன்றவற்றை பிலிப்பியர் நிருபத்தை மையமாக வைத்து தியானித்து வருகின்றோம். இலக்கு ஒன்றே! முதன்மையானது தேவ ராஜ்யம். அந்த ராஜ்யத்திலே நாம் நித்திய ஜீவனை அடைந்து கொள்ள வேண்டும். ஆதியிலே ஆதாம் ஏவாள் பாவம் செய்து, தேவ மகிமையை இழந்து போனார்கள். இழந்து போன தேவ மகிமையை மனுஷனுடைய எந்த கிரியைகளினாலும் மீளப் பெற முடியாது. அப்படியிருந்தும், மனிதர்கள் பற்பல வழிகளை தங்களுக்கென்று உருவாக்கி, பாவ நிவர்த்தி செய்யும்படி மதக்கிரியைகளையும், பாரம்பரியங்களையும் செய்து வந்தார்கள். அதனால், மனித குலத்திற்கு மீட்பு இல்லை. வரவிருக்கும் மீட்பையும், அந்த மீட்பின் வழியாக உண்டாகும் நித்திய ஜீவனையும் வெளிப்படுத்தும்படி, தேவன்தாமே தமக்கென்று ஒரு ஜனங்கூட்டத்தை பிரித்தெடுத்து, இனி வரவிருக்கும் மேன்மையான காரியங்கயங்களின் நிழலாக அவர்கள் மத்தியிலே கிரியைகளை நடத்தினார். பிதாவாகிய தேவன் முன்னறிவித்தப நிழலாக இருந்த காரியங்கள் நிஜமாகியது. கிறிஸ்து இயேசுவினாலே, மனித குலத்திற்கு இரட்சிப்பு உண்டானது. ஆனால், சிலரோ, நிஜமாய் இருக்கும் ஆண்டவர் இயேசுவின் வழியாக இரட்சிப்பை இலவசமாக பெற்றுக் கொண்ட பின்பும், நிழலாக இருந்த நியாப்பிரகாரியங்களை பற்றிக் கொண்டு தங்கள் சரீரங்களை ஒடுக்கி, மதக்கிரியைகளுக்கு மறும்படியும் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். பிலிப்பிய சபையிலே மட்டுமல்ல, குறிப்பாக அன்றிருந்த கலாத்திய சபையிலும் இத்தகைய வஞ்சிக்கிறவர்கள் சிலர் இருந்தார்கள். அதனால், தேவ ஊழியராகிய பவுல் கலாத்திய சபையோரை நோக்கி: “புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?” எனவே மறுபடியும் விட்டு வந்த சடங்குகளுக்கு இடம் கொடாமல், சத்திய ஆவியானவருக்கு இடங் கொடுங்கள்.

**கலாத்தியர் 3:3**

ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களோ?

**ஜெபம்:** பரலோக தேவனே, மதச் சடங்காச்சாரங்களுக்கு நான் மறுபடியும் இடம் கொடாமல், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்திலே உறுதியாய் நிலைத்திருக்க கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாசத்தின் பூரண நிச்சயம்

அநேக நூற்றாண்டுகளாக பழமையான, பாரம்பரியங்கள் நிறைந்த ஒரு தேசம் இருந்தது. அந்த தேசத்தின் ராஜாக்களும், அதன் குடிகளும், அவர்களுடைய மரபு, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களைக் குறித்து பெருமைபாராட்டி வந்தார்கள். உண்மையிலே அந்த பாரம்பரியங்கள் அநேக காலங்களாக இருந்து வந்தது. ஆனாலும், ஜனங்கள் அந்த தேசத்திலிருந்து, வேறு ஒரு தேசத்திற்கு இடம்பெயர ஆரம்பித்தார்கள். தாங்கள் வசிக்கும் பழமைவாய்ந்து தேசத்திலேதங்களுக்கும், தங்கள் பிள் ளைகளுக்கும் எதிர்காலம் இல்லை என்று அறிந்து கொண்டார்கள். இப்படியாக குறிப்பிட்ட செழி ப்புள்ள தேசத்திற்கு இடம்பெயர்ந்த ஒரு குடும்பத்தினர். தாங்கள் கிண ற்று தவளைகளைப் போல பல ஆண்டுகள் இருந்து விட்டோம் என்றும் உணர்ந்து கொண்டார்கள். புதிய தேசத்திலே புதிய வாழ்வு உண்டாயிற்று. விடுதலை உண்டாயிற்று. வாழ்க்கையிலே முன்னேற்றங்கள் உண்டாக ஆரம்பித்தது. பிள்ளைகள் சந்தோஷமாக இருந்தார்கள். பல ஆண்டுகள் கடந்து சென்றதும். தாங்கள் விட்டுவிட்ட பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் குறித்த நினைவு அக்குடும்பத்தினருக்கு உண்டாயிற்று. இப்பொழுது நாங்கள் நன்றாக இருக்கின்றறோம். அத்தோடு, எங்களுடைய பழைய பராம்பரியங்களையும், கலாச்சாரத்தின் கிரியைகளையும் நடப்பித்தால், இன்னும் அதிக மேன்மையாக இருக்கும் என்று எண்ணி, பழமையான காரியங்களை, இந்த புதிய வாழ்வோடு சேர்க்க ஆரம்பித்தார்கள். அநேக நூற்றாண்டுகளாக விட்டுவந்த தேசத்தில் இருந்த அவர்களுடைய பாரம்பரியங்களின் முடிவை அறிந்திருந்தார்கள். பின்னடைவுகளை அறிந்திருந்தும், அவைகளை தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார்கள். மறுபடியும் அவர்களுடைய பிள்ளைகள் பழைய பாரம்பரியத்தை புதிய வாழ்க்கையோடு சேர்த்துக் கொண்டால், காலப்போக்கில் பிள்ளைகளின் முடிவு என்னவாக இருக்கும்? "புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கிறதும் இல்லை. வார்த்துவைத்தால், துருத்திகள் கிழிந்துபோம், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம் புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைப்பார்கள் அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும்" என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். எனவே உங்கள் கிரியைகள் யாவும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயத்திலே, சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரத்தோடு, ஜீவனுள்ள புதிய மார்க்கத்தை உண்டாக்கிய கிறிஸ்து இயேசுவுக்குள் நடப்பிக்கபட வேண்டும்.

**எபிரெயர் 10:22**

**உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.**

**ஜெபம்**: பரலாக பிதாவே, இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தின் வழியாக நான் பிரவேசித்து, அந்த வழியிலே உறுதியாய் நிலைத்திருக்க எனக்கு பெலன் தந்தருள்விராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பலன் தராத மேன்மைகள்

**எபிரெயர் 4:14**

**நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம்.**

“நான் யார் என்று அவனுக்கு தெரியாது போல” “எங்களுடைய குடும்ப பின்ணனியை அறியாமல் இவன் பேசுகின்றான்” “அந்த மனிததன் பழைய பாடதிட்டதின்படி, அக்காலத்திலே அதி உயர் கல்வித் தகமையை பெற்றிருந்தார்” இப்படியான தொனிகளை குடும்ப உறவுகள் மத்தியில் மாத்திரம் அல்ல சபையிலும் சில விசுவாசிகள், ஊழியர்கள் குறிப்பிடுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அதாவது, சபையிலே சில குழப்பங்கள், கருத்து முரண்பாடுகள் ஏற்படும் போது, வேத வார்த்தைக்கு கீழ்படிந்து, தாழ்மையுள்ள இருதயத்திதோடு ஆவிக்குரிய போராட்டம் செய் வதற்குபதிலாக, தங்கள் பழைய வாழ்க்கையின் அல்லது பழைய வாழ்க்கையிலிருந்து இன்னும் விட்டுவிடாமல், இருதயத்திலே வைத்திருக்கும் காரியங்களை அறிக்கையிடுகின்றார்கள். வேதத்தைக் குறித்து பேசும் போது அல்லது ஜெபிக்கும் போது, நான் கிறிஸ்துவின் சிலுவையையும், தேவ கிருபையையுமே மேன்மைபாராட்டுவேன் என்று ஆணித்தரமாக சிலர் அறிக்கையிடுவார்கள். ஆனால், மற்றவர்களோடு பிரச்சனைகள் வரும் போது, தங்கள் வாழ்விலுள்ள உலக மேன்மைகளை கூறிவிடுகின்றார்கள். எடுத்துகாட்டாக, ஒரு ஊழியர் தவறும்போது, அவருடைய கல்வித் தகமை என்ன தென்று உனக்கு தெரியுமாஎன்று அவருடைய ஆதரவாளர்கள் கூறிக் கொண்டார்கள். பிரியமானவர்களே, கல்வித் தகமைகள் ஒருவனுக்கும் இரட்சிப்பை உண்டு பண்ணினதுமில்லை உண்டு பண்ணுவதுமில்லை. ஒருவன் பாவம் செய்தால், அவன் விசுவாசியாக இருந்தாலும், அல்லது மேல் மட்டத்திலே இருக்கும் பெரிய ஊழியக்காரனாக இருந்தாலும், தன்னுடைய விட்டு வந்த, பலனற்ற உலக தகமைகளினால் தன்னை நியாயப்படுத்த முயற்சி செய்யாமல், நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார் என்று அறிந்து, இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேர வேண்டும். “நமக்குப் பாவமில்லையென் போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.”

**ஜெபம்**: அன்பின் தேவனே, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைக்குரிய பழைய மனுஷனை நான் களைந்துபோட்டு, உள்ளத்திலே புதிதான ஆவியுள்வானாக புதிய மனுஷனை தரித்துக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள் | மே 18

📖 மாலை வாசகம் – 1 சாமு 15:22

# புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்

எகிப்திலே நானூற்று முப்பது வருடங்கள் அடிமைகளாக இருந்த தேவ ஜனங்கள் தங்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பும் போது, வனாந்திர வழியாக, வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு வழிநடத்தி செல்லப்பட்டார் கள். எனவே, அவர்கள் யுத்தத்திற்கு பழக்கமில்லாதவர்களாக இருந் தார்கள். அந்நாட்களிலே அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவே லரோடே யுத்தம்பண்ணினார்கள். (யாத்திராகமம் 17:8). இந்த செய்கை யின் நிமித்தம் கர்த்தர் அமலேக்கி யர்மேல் கோபம் கொண்டார். அம லேக்கின் கை கர்த்தருடைய சிங்கா சனத்துக்கு விரோதமாயிருந்தபடி யால், தலைமுறை தலைமுறை தோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும் என்று முன்னறிவிக்கப்பட்டது. பல ஆண்டு களுக்கு பின்னர், இஸ்ரவேல் சந் ததி வாக்களிக்கப்பட்ட தேசத்தை சுதந்தரித்து, தங்களுக்கென்று சவுல் ஒருராஜாவைநியமித்தார்கள். அப்பொழுது, சேனைகளின் கர்த்தர் சொல் லுகிறது என்னவென்றால், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திரு க்கிறேன். இப்போதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அழித்துப்போடு என்று சொன்னான். ஆனால், சவுலும் ஜனங்களும் அலேக்கிய ராஜாவையும், ஆடுமாடுக ளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட் டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும், அழித்துப்போட மனதில் லாமல் தப்பவைத்து, கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக அவை களை கொண்டு வந்தார்கள். ஏன் இப்படி செய்தாய் என்று கர்த்தர் கேட்ட போது, அவைகளை கர்த்தருக்கு பலியிட கொண்டு வந்தோம் என்றுசாட்டு போக்கு கூறினான். அழிக்கப்பட வேண்டியவைகளை அழி த்துப்போட அவனுக்கு மனதில்லாதவனாயிருந்தான். அது அவனுடைய மாம்ச இச்சையாக இருந்தது. அதுபோலவே, இன்றும் சிலர், கிறிஸ்து வழியாக உண்டான இரட்சிப்பை பெற்ற பின்பும், தங்கள் பழைய தீட் டான வழிகளை விட்டுவிட மனதில்லாமல், அவைகளை கர்த்தருக்கு என்றுவைத்திருக்கின்றோம்.கர்த்தருக்காகஇப்படி செய்கின்றோம். என்று, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படியாமல், சடங்காச்சாரக் கிரியைகளை நடப்பிக்கின்றார்கள். பிரியமானவர்களே, பழையவைகளை விட்டு பதிய மனுஷனுக்குரிய சாயலை அணிந்து கொள்ளுங்கள்.

**மத்தேயு 6:7**

மெய்யான நீதியிலும் பரிசு த்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்து க்கொள்ளுங்கள்.

**ஜெபம்**: அன்பின் தேவனே, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைக்குரிய பழைய மனுஷனை நான் களைந்துபோட்டு, உள்ளத்திலே புதிதான ஆவியுள்வானாக புதிய மனுஷனை தரித்துக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இருதயத்திலே உண்டாகும் விருத்தசேதனம்

**கொலோசெயர் 2:11**

கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்.

விசுவாச மார்க்கத்தார் என்று அழைக்கப்படுகின்றவர்களில் பலர், சிலுவை சின்னத்தை, நாடக்களிலே அல்லது சங்கிலிகளிலே கோர்த்து, கழுத்திலே போட்டுக் கொள்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்கின்றவர்களில் ஏறத்தாழ யாவரும், சிலுவை சின்னத்தை வீட்டின் சுவர்களிலே தொடங்க விட்டிருப்பார்கள். இந்த அடையாளத்தை காணும் போது, இவன் கிறிஸ்தவன் என்று மற்றவர்கள் எண்ணிக் கொள்கின்றார்கள். ஆனால், இன்று சிலுவை சின்னத்தை கழுத்திலே போட்டிருக்கின்றவர்கள் மற்றயும் சுவரிலே தொங் கவிடுகின்றவர்கள் யாவரும், உண்மையாகவே ஆண்டவர் இயேசுவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுகின்றார்கள் என்று சொல்ல முடியுமா? அல்லது அவர்கள் உண்மையிலே கிறிஸ்துவை பின்பற்றுகின்றவர்கள் என்று கூற முடியுமா? ஒரு அடையாளத்தை கழுத்திலே போட்டுக் கொள்வதினால் ஒருவனுடைய பேச்சு, நடை, உடை, பாவனை கிறிஸ்துக்குரியதாக மாறிவிடுமோ? இல்லை. அது ஒரு வெளிப்படையான அடையாளம். ஆனால், மீட்பர் இயேசுவின் சிலுவையின் கருப்பொருளை உணர்ந்து, அதை தன் இருதயத்திலே வைத்து வைத்திருக்கின்றவன், தேவனுக்கு பிரியமுள்ளவனாக இருப்பான். இதற்கொத்ததாகவே விருத்தசேதனமும் இருக்கின்றது என்று அப்போஸ்தலராகிய பவுல், பிலிப்பிய நிருபத்தின் மூன்றாம் அதிகாரத்திலே எழுதியிருக்கின்றார். தங்கள் சரீரத்திலே விருத்தசேதனம் செய்தவர்கள் அதைக் குறித்து மேன்மைபாராட்டினார்கள். சரீரத்திலே ஒரு அடையாளத்தை வைத்திருப்பதினால் மேன்மை என்ன? ஆனால், ஆவியின்படி இருதயத்திலே விருத்தசேதனமே விருத்தசேதனம். அதாவது, தேவனுடைய கற்பனைகளையும், கட்டளைகளையும், இருதயத்திலே வைத்து, தன் இருதயத்தை தேவ வார்த்தையின்படி காத்துக் கொள்கின்றவனே உண்மையான விருத்தசேதனதை கொண்டிருக்கின்றார். “உன் தேவனாகிய கர்த்தரில் நீ உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து பிழைக்கும்படி, உன் தேவனாகிய கர்த்தர் உன் இருதயத்தையும் உன் சந்ததியாரின் இருதயத்தையும் விருத்தசேதனம்பண்ணுவேன்” என்று பரிசுத்த வேதாகமத்திலே உபாகமம் என்ற புஸ்தகத்திலே வாசிக்கின்றோம். மனுஷனுடைய கைகளினாலே உண்டாகும் கிரியைகளினாலே வரும் பிரயோஜனம் அற்பமானது, அத னால்ஒருவனுக்கும் இரட்சிப்பு உண்டாவதில்லை. எனவே உங்கள் உள்ளத்திலே தேவனை மேன்மைப் படுத்துங்கள்.

**ஜெபம்:** என் இருதயத்தை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, என் வெளியரங்கமான கிரியைகளிலே நான் மேன்மைபாராட்டால், உள்ளத்திலே உமக்கு உண்மையாக இருக்க எனக்கு உணர்வுள்ள இருயதத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உள்ளத்தில் உண்மையாயிருங்கள்

நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான் என்று யாக்கோபு முதலாம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். யார் இந்த இருமனமுள்ளவர்கள்? எடுத்துக்காட்டாக, தேவ ஞானத்தை அறிந்து, அதன் வழியிலே நடக்க முயற்சி செய்துகொண்டு, உலக ஞானத்தில் கொஞ்சத்தையும் அதனோடு சேர்த்துக் கொள்கின்றவர்கள். “நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.” என்று 1 யோவன் 5ம் அதிகாரம் 19ம் வசனத்திலே வாசிக்கின்றோம். ஒருவன் தேவனால் உண்டாயிருந்தால், அவன் பொல்லாத வழிகளை விட்டு தன்னை விலக்கி கொள்ள வேண்டும். நான் இரட்சிப்படைந்தவன், தவறாமல் ஆலயத்திற்கு செல்கின்றவன்என்று கூறிக் கொண்டு, உலகத்தின் போக்கில் சிலவற்றை தன் இருதயத்திலே வைத்திருக்கின்றவன், இருமனமுள்ளவனாக இருக்கின்றான். “வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்.” “பொல்லாதவர்களே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என் தேவனுடைய கற்பனைகளை நான் கைக்கொள்ளுவேன்.” “என் மறைவிடமும் என் கேடகமும் நீரே உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்.” என்று சங்கீதக்காரன் கூறியிருக்கின்றார். எனவே, எங்கள் மத்தியிலும் இருக்கும் பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள். தேவ சபையிலே இருக்கின்றோம் என்று கூறிக்கொண்டு, உலக போக்கை பின்பற்றி நடக்கும் இருமனதுடையவர்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இவர்கள் தங்கள் வழிகளிலே நிலையற்றவர்கள், அவர்களை பின்பற்றாமல், உங்கள் உள்ளத்திலே தேவ பயமுள்ளவர்களாக, தேவ பிள்ளையாக நடந்து கொள்ளுங்கள்.

**யாக்கோபு 1:8**

**இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.**

**ஜெபம்**: நான் என் உள்ளத்தில் உண்மையாக இருக்கு வேண்டும் என்று விரு ம்புகின்ற தேவனே, உலகபோக்கோடு நான் உறவுகளை வைத்துக் கொள் ளாதபடிக்கு, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்துவை அறியும் மேன்மை

**பிலிப்பியர் 3:8**

அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காகஎல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்

ஒரு சபையிலே இரண்டு சகோதர்களும், அவர்கள் குடும்பங்களும் மிகவும் நட்புள்ளவர்களாக இருந்துவந்தார்கள். அவர்களில் ஒருவன் கல்வி கற்று நல்ல உத்தியோகத்திலே இருந்தான். மற்றவன் தொழிற்சாலையொன்றிலே வேலை செய்து வந்தான். அவர்கள் மத்தியிலே பொழுது போக்குகளைக் குறித்து பொதுவான விருப்பு வெறுப்புகள் இருந்ததால், அவர்கள் மத்தியிலே கருத்துமுரண்பாடுகள் இல்லாதிருந்தது. ஆண்டுகள் கடந்து சென்ற பின்பு, சபையிலே நடந்து ஒரு காரியத்தைக் குறித்து அவர்கள் மத்தியிலேகருத்து முரண்பாடுகள் உண்டாகி, அது பிரிவினையாக மாறிவிட்டது. அவர்களுக்கிடையிலே வாக்குவாதங்கள் உண்டாயிற்று. தொழிற்சாலையிலே வேலை புரியும் அந்த சகோதரனுடைய வாயை எப்படியாவது அடக்க வேண்டும் என்று தீர்மானித்த மற்றய சகோதரன், "அவன் கல்வி அறிவில் லாதவன், தன்னுடைய அறிக்கு ஏற்றபடிதான் நடந்து கொள்ளுவான்" என்று உலகத்தின் கல்வியினால் தான் கண்டு கொண்ட மேன்மையை, தன் சகோதரனை தாக்கும் ஆயதமாக்கிக் கொண்டான். பிரியமானவர்களே, முதலாவதாக விசுவாசிகள் மத்தியிலுள்ள ஐக்கியமானது, பொதுவான விருப்பு வெறுப்புக்களின் அடைபடையில் இருக்கலாகாது. "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது." என்று தேவ ஊழியராகிய யோவான் தன்னுடைய நிருபத்திலே கூறியிருக்கின்றார். இரண்டாவதாக, தன்னிடம் இருக்கும் உலக மேன்மைகளை குறித்து மேன்மைபாரட்டுகின்றவனிடத்தில் இருமனம் உண்டு. அவன் இன்னும் பழைய வாழ்க்கைக்குரிய மாம்சத்தின் எண்ணங்களுக்கு இடங் கொடுக்கின்றவனாக இருக்கின்றான். இத்தகைய நிலைமைகள் பிலிப்பி சபையிலும் இருந்ததால், மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் நானும் வைக்கலாம் வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம் என்று தேவ ஊழியராகிய பவுல் கூறினார். மத முறைமைகளின்படி எல்லாச் சடங்காரச்சாரங்களையும் நிறைவேற்றியிருந்தார். பிறப்பினாலே உண்டான சமூக அந்தஸ்து அவருக்கிருந்தது. மத சட்டதிட்டங்களின்படி குற்றம் சாட்டப்படாதராக இருந்தார். ஆகிலும், தனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமாக எண்ணினார்.

**ஜெபம்:** பரலோக தேவனே, இந்த மாயையான உலகம் தரும் மேன்மைகளை நான் பற்றிக்கொண்டு, நான் நித்தியமானவைகளை விட்டுவிடாதபடிக்கு, மேலானவைகளை நாடித்தேட எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பரலோக மேன்மைகள்

"எதைப்பற்றியும் பேசுங்கள் ஆனால் என்னுடைய குடும்பத்தைப்பற்றி மட்டும் பேசினால், என்னை வேறு மனுஷனாகத்தான் பார்ப்பீர்கள்" இப்படியாக சில விசுவாசிகள் ஏதோ ஒரு காரியத்தை தங்கள் வாழ்விலே மேன்மைப்படுத்தி வைத்திருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். சில வேளைகளிலே ஏதோ ஒரு காரியத்திற்காக தாங்கள் பெற்றுக் கொண்ட இரட்சிப்பையும் அற்பமாக எண்ணிவிடுகின்றார்கள். எதை இழந்து போனாலும், தன்மானத்தை இழந்துபோகலாமா? குடும்ப கௌரவம் என்ன ஆகின்றதுஎன்று தங்களைத் தாங்கள் மேன்மை படுத்திக் கொள்கின்றவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் கிறிஸ்துவை அறியும் மேன்மையை குறித்த உணராதிருப்பதால், இந்த உலகம் தரும் மேன்மைகளை குறித்து பெருமைபாராட்டிக் கொள்கின்றார்கள். சில சமயங்களிலே நாம் யாவரும் இத்தகைய நிலைமைக்கு தள்ளப்பட்டுப் போக்கின்றோம். அதாவது, அவரவர் தங்களிடம் இருக்கும், தாலாந்துகள், தகமைகளை குறித்து முற்றிலும் பேசக்கூடாது என்பது அல்ல, ஆனால், சிலரோ அவைகளினாலே தங்களை மற்றவர்களைவிட மேன்மையாக எண்ணிக் கொள்கின்றார்கள். தங்கள் உலக மேன்மைகளினாலே, சபை ஐக்கியங்களிலே பாகுபாடுகளையும், பிரிவினைகளையும் உண்டு பண்ணி கொள்கின்றார்கள். அக்காலத்திலே, தேவ ஊழியராகிய பவுலோடு ஊழியம் செய்து வந்த சிலர் இந்த உலகத்தின்மேல் ஆசைவைத்து, தேவனைவிட்டு பிரிந்து போய்விட்டார்கள். இன்றைய நாட்களிலே, சிலர், தாங்கள் தேவனுக்கு ஊழியம் செய்கின்றோம் என்று சத்தியத்தைவிட்டு விலகி, தேவ ஊழியத்தை தங்கள் ஆதாயத் தொழிலாக கொண்டிருக்கின்றார்கள். "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் என்று 1 யோவான் 2ம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். எனவே, கிறிஸ்துவை அறியும் மேன்மையை உணர்ந்து மேலானவைகளை பற்றிக் கொள்ளுங்கள்.

**1 யோவான் 2:17**

உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, அந்த மேன்மையான அழைப்பை உணர்ந்து உம்மை அறியும் அறிவிலே நான் நாள்தோறும் வளர்ந்து பெருக எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அதிமேன்மையானது என்ன?

தங்கள் கல்வி, தகமை, ஆஸ்தி, அந்தஸ்துகளை துறந்து, ஆண்டவராகிய இயேசுவுக்கு ஊழியம் செய்யும்படிக்காய் தங்களை ஒப்புக் கொடுத்தவர்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஊழியர்கள் மட்டுல்ல, சில விசுவாசிகளும் உலக மேன்மைகளை அடைந்திருந்தும், அவைகளைக் குறித்து மேன்மைபாராட்டாமல், தங்கள் இருதயத்தை ஆண்டவராகிய இயேசுக்கு ஒப்புக் கொடுத்தவர்கள் இன்றைய நாட்களிலும் இருக்கின்றார்கள். ஆனால், இன்று விசுவாசிகள் மத்தியிலே ஆசீர்வாதங்கள் என்று எதைக் குறித்து கூறிக் கொள்கின்றார்கள். சற்று தரித்திருந்து சிந்தித்துப் பாருங்கள். பொதுவாக, ஆண்டவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பின்பு, கல்வியினால் உண்டாகும் மேன்மை, உத்தியோகங்கள், ஆஸ்திகள், மனிதர்கள் மத்தியிலே உண் டான அந்தஸ்துக்கள், மேன்மக்கள் என்று கருதப்படும் மனிதர்களோடும் உண்டான நட்புகளை குறித்து மேன்மைபாராட்டி, தங்களை இரட்சிக்க தம்மைப் பலியாக சிலுவையிலே ஒப்புக் கொடுத்து, விலை மதிக்கமுடியாத தம்முடைய இரத்தத்தை சிந்திய ஆண்டவர் இயேசுவை மறந்து, இந்த உலகத்தினால் உண்டான மேன்மைகளையே ஆசீர்வாதங்கள் என்று கருதிக் கொள்கின்றார்கள். “நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.” என்று கொலோசேயர் 3ம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். பிரியமானவர்களே, உங்கள் வாழ்விலே இதைவிட மேன்மையானது என்ன? பிதாவாகிய தேவன்தாமே, தம்முடையவர்களை பிழைப்பூட்டுகின்றார். இது சத்தியம்! சில சந்தர்பங்களிலே வாரியிருக்கின்றார். வேறு சில சமயங்களிலே எலியாவின் நாட்களிலே, பஞ்ச காலத்திலே போஷித்ததுபோல, அதிசய விதமாக போஷிக்கின்றார். தம்முடையவர்கள் தங்கள் ஆத்துமாக்களை மண்ணோடு ஒட்டிக் கொள்ளும்படியாக அல்ல, மாறாக, தம்மண்டை சேர்ந்து, தம்மைப் பற்றிக் கொள்ளும்படிக்காள் இவைகளை நடப்பிக்கின்றார். எனவே நீங்கள் உலகத்தின் மேன்மைகளை அல்ல, பரலோக மேன்மைகளை நாடித் தேடுங்கள்.

**1 கொரிந்தியர் 15:19**

**இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.**

**ஜெபம்:** தூரமாக இருந்த என்னை பிரித்தெடுத்து, உம்முடைய பிள்ளையாக்கின தேவனே, அந்த மேன்மையை நான் ஒருநாளும் மறந்து போய்விடாமல், உம்மை பற்றிக் கொண்டிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சத்திய ஆவியானவர்....

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவானவர், தாம் காட்டிக் கொடுப்பப்படும் அந்த இராத்திரியிலே, தம்முடைய சீஷர்களை றோக்கி: நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன் நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும் நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார் நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக் குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார். இன்னும் அநேககாரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள் அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன் என்றார். ஆம், பிரியமானவர்களே, அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்து, உயிர்த்து, பரமேறி, பத்து (10) நாட்களுக்கு பின்னர், அவர் முன்னுரைத்தபடியே, சத்திய ஆவியானவர் இந்த பூமிக்கு அனுப்பப்பட்டார். அந்த வாக்குத்தத்தின் ஆரம்பத்தின் நிறைவை இன்று நாம் நினைவுகூருகின்றோம். அந்த நாள் முடிவு அல்ல ஆரம்பம் என்பதை இன்று பலர் மறந்து போய்விட்டார்கள். விசுவாசமார்கத்தாரில்அநேகர்,“உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது.” என்ற வசனத்தின்படி, ஆவியானவரின், அபிஷேகத்தையும், வரங்களையும், அற்றபமாக எண்ணி, அவைகள் வெற்றி வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதை மறந்து, அவருடைய வரங்கள் கட்டாயமாக தேவையில்லை (Optional)என்று கருதி, மறுபடியும் தங்கள் மாம்சத்தின் நற்கிரியைகளுக்கு இடங்கொடுத்திருக்கின்றார்கள். நீங்களோ சத்திய ஆவியானவருக்கு இடங்கொடுங்கள்.

> **யோவான் 14:17**
>
> **அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.**

**ஜெபம்:** வழிநடத்தும் சத்திய ஆவியானவரை எனக்கு தந்த தேவனே, நான் ஆவியிலே ஆரம்பித்து மாம்சத்தின்படி கிரியைகளை செய்யாதிருக்க எனக்பு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உலகமும் மாம்சமும்....

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலராகிய பிலிப்பியருக்கு எழுதின நிரூபத்தை மையமாக வைத்து தியானித்து வருகின்றோம். ஆரம்பதிலே குறிப்பிட்டது போல, தேவ ஊழியராகிய பவுல், ரோமாபுரியியிலுள்ள சிறையிலிருந்து இந்த நிரூபத்தை எழுதியிருக்கின்றார். அவர் சிறையிலே இருந்ததன் காரணம் என்ன? இயேசு தான் கிறிஸ்து, அவரே மனிதகுலத்தை மீட்டு இரட்சிக்கின்றவர். ஆவராலே மட்டுமே நித்திய ஜீவன் உண்டு என்ற நற்செய் தியை அறிவித்ததினாலே அவரை சிறையிலிட்டார்கள். இந்த நிரூபத்தை எழுதும் போது, அவர் எருசமேலிலே இல்லை. கிறிஸ்துவினிமித்தம் உண்டாகும் உபத்திரவங்கள் அவருக்கு உண்டான தகமைகளைவிட மேன்மையாககருதினார். தனக்கு உலகத்தால் உண்டான மேன்மையைக் குறித்து அவர் கூறும் போது. ஏழு காரியங்களை குறிப்பிட்டிருக்கின்றார். 1. நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன், 2. இஸ்ரவேல் வம்சத்தான், 3. பென்யமீன் கோத்திரத்தான், 4. எபிரெயரில் பிறந்த எபிரெயன், 5. நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன், 6. பக்திவைராக்கிய த்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், 7. நியாயப்பிரமாணத்திற் குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன். இவை யாவும், அவருடைய ஜனங்கள் மத்தியிலே மிகவும் மேன்மையும், கனமுமான தகமைகளாக இருந்துவந்தது. அது மாத்திரமல்ல, அந்நாட்களிலே, ரோமன் அல்லது ரோம பிரஜாஉரிமையை பெற்றிருப்பது, அன்றைய உலகத்தார் மத்தியிலே பெரிதான அந்தஸ்தாக இருந்தது. தன்னுடைய மதவைராக்கியத்தையும், உலகத்தினால் உண்டான எல்லா மேன்மைகளையும் ஒன்றாகசேர்த்துக் கொண்டாலும், தன்னுடைய பாவங்களுக்கு பரிகாரம் கிடைக்காது. இவைகள் ஒன்றாலும் மனிதனுக்கு இரட்சிப்பு உண்டாகாது என்று திட்டமாக அறிந்து கொண்டார். அது மாத்திரமல்ல, இவைகள் யாவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிவதற்கு தடைகளும், அவரோடு வாழ்வதற்கு இடையூரானவைகளும் என்று உணர்ந்து கொண்டதினாலே, மதவைராக்கியத்தினாலும், பிறப்பினாலும், தன்னுடைய பிரயாசத்தினாலும் தனக்குண்டான உலக மேன்மைகள் யாவையும், ஒன்றுக்கும் உதவாதகழிவாகஎண்ணிக் கொண்டார். இரட்சிப்பானது, கிரியைகளினாலே அல்ல, கிருபையினாலேவிசுவாசிகத்தைக்கொண்டு உண்டாகின்றது.

**அப்போஸ்தலர் 4:12**

நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.

**ஜெபம்**: அன்பின் பரம பிதாவே, உலக போக்கும், மாம்சமும் பிசாசக்கு உட்பட்டிருக்கின்றது என்பதை அறிந்து உணர்ந்து சத்திய வழியிலே நடக்க தூய ஆவியானவரின் பெலனை தந்த வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆவியே உயிர்ப்பிக்கிறது...

ஒரு கிராமத்திலே இயங்கி வந்த சபை ஐக்கியமொன்றிற்கு, அவ்வூரிலுள்ளவர்களுக்குள் கல்வியை கற்றிருந்த, மனிதனொருவன் வந்திருந்தான். அவன் கிராம மட்டத்திலுள்ள அரச ஸ்தாபனங்களில் செல்வாக்குடையவாக இருந்தான். அந்த சபையிலுள்ள சில மூத்த உறுப்பினர்கள், "அந்த மனிதன் கல்வி கற்றவன், செல்வாக்குடையவன்" எனவே அவனை எப்படியாவது தங்களுடைய சபையிலே தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள். அந்த ஆலோசனை, சபையின் ஊழியருக்கும், அங்கிருந்த பலருக்கு நன்மையானதாக இருந்தால், அந்த மனிதனை ஏற்றுக் கொண்டு, காலதாமதமின்றி நிர்வாக உறுப்பினராக நியமித்தார்கள். அந்த மனிதனுடைய மாம்சத்தின் நற்கிரியைகளினாலே அதிக துன்பம் அந்த சபையோருக்கு ஏற்படுவதற்கு அநேக நாட்கள் செல்லவில்லை. அந்த சபையிலே, சில காலமாக,சத்திய ஆவியாவவின் வழிநடத்து தலைவிட அந்த மனிதனு டைய குரலே ஓங்கியிருந்தது. அந்த மனிதனும், தன்னுடைய தகமைகளைக் குறித்து மேன்மைபாரட்டுகின்றவனாகவும், உலக முறைமைகளை கிறிஸ்துவின் சபைக்குள் திணிக்கின்றவ னாகவும் காணப்பட்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, உலக முறைமையின்படி கற்றவனாக இருந்தாலும், கல்வி கற்காதவனாக இருதாலும், ஐசுவரியவானாகவோ அல்லு ஏழையாகவோ இருந்தாலும், செல்வாக்கு நிறைந்தவனாகவோ அல்லது அற்பமாக எண்ணப்பட்டவனாகவோ இருந்தாலும், உலக மேன்மைகளின்படி வாழ்கின்றவன், மாம்ச எண்ணங்களின்படி வாழ்கின்றவனாக இருக்கின்றான். சிலர், தங்களுடைய உலக மேன்மைகளை விட்டுட்டு, தேவ வார்த்தைக்கு முற்றிலும் கீழ்படிய மனதில்லாமல், அவைகளை நான் தேவனுக்கென்று பயன்படுத்தேன் என்று எண்ணக் கொள்கின்றார்கள். தேவனுடைய வார்த்தைக்கு முரணாக செயற்படும் எந்த எண்ணமும் தேவனுக்கு உகந்தவைகள் அல்லவே. தேவ ஊழியராகிய பவுலுக்கு இந்த உலக்தால் உண்டான மேன்மைகளை அநேகமிருந்தது, அவைகள் அவர் கிறிஸ்துவினால் உண்டான மேன்மையோடு, ஒப்பிட்டு பார்க்கத் துணியவில்லை. அவைகள் ஒன்றுக்கும் உதவாது என்று கழித்துவிட்டார். இன்றும் சிலர், தேவனாலே உண்டாகியிருக்கும் மேன்மைகளை மறந்து, உலகத்தின் மேன்மைகளால் தேவ ஊழியத்தை நிறைவேற்ற முற்படுகின்றார்கள். அவைகளினாலே வேதனைகளும் துன்பங்களும் பெருகுமேயன்றி, தேவ சித்தம் நிறைவேற்றபட மாட்டாது. எனவே வழிநடத்தும் ஆவியானவருக்கு இடங்கொடுங்கள்.

**யோவான் 6:63**

**ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது;**

**ஜெபம்:** பரலோக தேவனே, நான் என்னுடைய மாம்சத்தின் எண்ணங்களிலே சாராமல் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கின்ற உம்முடைய சத்திய வசனத்தின்படி வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தரே எங்கள் மேன்மை!

“ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங் கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்” என்று எபிரெயர் 12ம் அதிகாரம் 1ம் வசனத்திலே வாசிக்கின்றோம். விசுவாசித்திலே ஆரம்பித்த நாம் இறக்கிவைத்த பாரங்களை மறுபடியும் தூக்கி சுமக்காமலும், விட்டு வந்த மோசம் போக்கும் மாம்சத்தின் எண்ணங்களையும் முற்றாக களைந்து போய்விட வேண்டும். நம்முடைய ஆண்டவராகிய இயேசு நமக்கு கொடுத்த பெரிதான அழைப்பை சிந்தித்துப் பாருங்கள். “வருத்தப்பட்டுப் பார ஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்.” கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய நாளிலே உங்கள் வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் இப்போதும் வருதப்பட்டு பாரங்களை சுமக்கின்றீர்களா? உங்கள் சுமை பாரமாக இருக்கின்றதா? உங்கள் நுகம் கடினமானதாக இருக்கின்றதா? நீங்கள் கடந்து வந்த பாதையை ஆராய்ந்து பாருங்கள். ஆவியிலே ஆரம்பித்த பின்பு, நீங்கள் உங்கள் வாழ்விலே எடுத்துக் கொண்டு தீர்மானங்களை மீள்ஆய்வு செய்து பாருங்கள். நீங்கள் ஏற்படுத்திக் கொண்ட புதிய உறவுகளை ஆராய்ந்து பாருங்கள். உங்கள் இருதயத்தில் உண்மையாக எதைக் குறித்து மேன்மை பாராட்டுகின்றீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள்? உங்கள் பிள்ளைகளின் வாழ்விலே எதைக் குறித்து மேன்மையாக எண்ணுகின்றீர்கள்? உலக கல்வி, வேலை, அந்தஸ்து, ஆஸ்திகள் இவைகள் மேன்மையான ஆசீர்வாதங்களாக தோன்றுகின்றதா? உங்கள் வாழ்விலே குழப்பங்கள் ஏற்பட்டபோது, யாரைப் பின்பற்றினீர்கள்? எப்படியாக சவால்களை ஜெயித்தீர்கள்? மாம்சத்திலோ அல்லது ஆவியின்படியுயோ? எங்களுடைய போராயுதங்கள் மாம்ச பெலன் அல்ல. என்பதை திட்டமாக உணர்ந்து கொண்டு, ஆவியானவருடைய வழிநடத்துதலுக்கு இடங் கொடுங்கள். அவர் உங்களை சகல சத்தியத்தில் வழிடத்திச் செல்வார்.

**2 கொரிந்தியர் 10:17**

மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மை பாராட்டக்கடவன்.

ஜெபம்: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, ஆவியிலே ஆரம்பித்த நான், மறுபடியும் மாம்சத்தின் எண்ணங்களின்படி நடக்காமல் இருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆவிக்குரிய போராட்டம்

**2 கொரிந்தியர் 10:3**

**...மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல.**

தேவ ஊழியராகிய பேதுரு, தன்னுடைய 2ம் நிருபத்தின் கடைசி அதிகாரத்திலே, வேதத்தை புரட்டுகின்ற பொல்லாதவர்கள், அக்கிரமக்காரர்கள், கள்ளப் போதகர்களைக் குறித்து விசுவாசிகள் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று எச்சரிப்பை வழங்கியிருக்கின்றார். கடைசி காலத்திலே வாழ்ந்து வருகின்ற நாம், கர்த்தர் வரக் காத்திருக்கின்றோம். வேத வார்த்தைகளை அறிந்திருக்க வேண்டிய பிரகாரமாக அறியாதவர்களும், மன உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள். “ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்.” என்று தன்னுடைய நிருபத்தின் கடைசி வசனத்திலே கூறியிருக்கின்றார். ஆம், பிரியமானவர்களே, பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் 3ம் அதிகாரத்தின் ஆரம்பத்திலே, பொல்லாத வேலையாட்களுக்கும், பின்மாற்றக் காரருக்கும், தங்கள் பழைய மதச்சடங்குகளுக்கு திரும்புகின்றர்களுக்கும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கூறியிருப்பதை கடந்த நாட்களிலே தியானித்தோம். இவர்கள் இயேசுகிறிஸ்துவை அறியும் அறிவிலிருந்து விசுவாசிகளை வஞ்சித்து, மாம்சத்தின் எண்ணங்களுக்கு அவர்களை திருப்பிவிடுகின்றவர்களாக இருக்கின்றார்கள். மனமேட்டிமைகள் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் செயற்படுகின்றது என்பதை 2 கொரிந்தியர் 10:5 ல் வாசிக்கின்றோம். அழிவுக்கு முன்னானது அகந்தை. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. (நீதிமொழிகள் 16:18). எனவே, தேவ ஊழியராகிய பவுல், என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக, மாம்சத்திலே தனக்கு உண்டான உலக மேன்மைகள் எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டுவிட்டார். எனவே, தேவனுடைய பெலத்தினாலேயே, நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். பிரியமானவர்களே, கிறிஸ்து இயேசுவை அறியும் அறிவிலே வளருங்கள். அதற்குகு எதிராக செயற்படும் மேட்டிமைகளை விட்டுவிடுங்கள்.

**ஜெபம்**: உம்முடைய வார்த்தையை அனுப்பி என்னை விடுதலையாக்கின்ற தேவனே, நீர் முன்குறித்தவைகள் நிறைவேறும்படிக்கு நான் உமக்காக காத்திருக்கும் பெலனை எனக்கு தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்துவானவரே மகிமையின் நம்பிக்கை

**பிலிப்பியர் 3:9**

**கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,**

“இவரைப் பார்த்தால் ஒரு மேய்பருக்குரிய தோற்றம் இல்லை. அவருடைய குரல் வளம்,பேசும் பாணி, போதருக்கு ஏற்புடையதாக இல்லை” என்று சில விசுவாசிகள் தேவனுடைய ஊழியக்காரரைக் குறித்து பேசுவதை கேட்டிருப்பீர்கள். ஒரு தேவனுடைய ஊழியக்காரனுடைய குரல் வளம் நன்றாகவும், அவருடைய பேசும் பாணியானது கவர்சியாவும் இருந்தால் நல்லது. ஆனால், அவைகளினால் மேன்மை உண்டாவதில்லை. சிலர் வெளி தோற்றங்களை வைத்து, போதகர்களையும், மேய்பர்களையும்இடை போட்டு விடுகின்றார்கள். இன்றுமட்டுமல்ல, அன்றும் அப்படியானவர்கள் சபைகளிலே இருந்தார்கள். தேவனுடைய ஊழியக்காரனாகிய பவுல், கொரிந்து சபைக்கு எழுதும் போது, வெளித்தோற்றத்தின்படி பார்க்கிறீர்களா? என்று கேட்டார். ஏனெனில், அவருடைய வெளிதோற்றமானது விரும்பப்படதக்கதாக இருக்கவில்லை. அவரைக்குறித்து சிலர் கூறும் போது, அவனுடைய நிருபங்கள் ஆழமானதும், பலமுமுள்ளவைகளாக இருக்கின்றது. சரீரத்தின் தோற்றமோ பலவீனமும், பேசும் விதமானது நகைப்புக்குரியது என்று கூறினார்கள். இவரை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே, தம்முடைய விசேஷித்த ஊழியத்திற்கென்று பிரித்தெடுத்தார். வெளித்தோற்றங்களைப் பார்த்து, காரியங்களை நடப்பிக்கின்றவர்களைக் குறித்து தேவனுடைய ஊழிக்காரனாகிய பவுல் எழுதும் போது: “ஆகிலும் தங்களைத்தாங்களே மெச்சிக்கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம் தங்களைக் கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல.” என்று கூறியிருக்கின்றார். பாவமன்னிப்பும், இரட்சிப்பும், கிரிகைகளினாலும், வெளிதோற்றத்திலும் உண்டாவதில்லை. மாறாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தினாலே உண்டாகின்றது. கிறிஸ்து அறிவதும், கிறிஸ்துவை மகிமையின் நம்பிக்கையாக கொண்டிருப்பதும், கிறிஸ்துவிலிருந்த சிந்தையை கொண்டிருப்பதுமே ஒரு விசுவாசிவாசியின் மேன்மையாக இருக்கின்றது. எனவே, “நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், சுய நீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படுவதையே நாடுகின்றேன் என்று திட்டமாக கூறியிருக்கின்றார்.

**ஜெபம்**: கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக எனக்குள் இருப்பதே அந்த இரகசியம் என்பதை தெரியப்படுத்த சித்தம் கொண்ட தேவனே, அந்த நம்பிக்கையிலே நான் அசையாமல் உறுதியாய் இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்துவை ஆயதப்படுத்திக்கொள்ளுங்கள்

கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ள வேண்டும். சட்டதிட்டங்கள், மதச்சடங்குகள், மனித முறைமைகளில் உண்டாகும் நீதியை களைந்து போட வேண்டும். அவைகளை முற்றாக விட்டுவிட்டு, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவர்களாக இருந்து, அத்தோடு, கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கின்றோம் என்று காணப்பட வேண்டும். அதற்காக ஒவ்வொரு விசுவாசியும் என்ன செய்ய வேண்டும்? ஆண்டவரரிகிய இயேசு கிறிஸ்துவையும், 1. அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகின்ற அறிவிலே வளரவேண்டும். 2. கிறிஸ்துவுடன் மரணமதின் சாயலிலே இணைந்து கொள்ள வேண்டும். 3. நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாக வேண்டும். எனவே, இந்த காரியங்களுக்கு தடையாக எவைகள் வருகின்றதோ, அவைகள் யாவும் அழிவுக்குரியவைகளும், அழிந்து போகின்றவைகளுமாயிருப்பதால், கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன் எண்ணுகின்றேன் என்று தேவ ஊழயிராகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்திலே 3ம் அதிகாரத்திலே கூறியிருக்கின்றார். அதாவது, கிறிஸ்து இயேசுவைப் போல, நாமும், இரத்தம் சிந்தி, சிலுவையிலே தொங்கி மரிக்க வேண்டும் என்பது பொருளல்ல. கடினமானவைகள் யாவற்றையும் அவர்தாமே நமக்காக நிறைவேற்றி முடித்திருக்கின்றார். “அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். புதிதும், ஜீவனுமான வழியை உண்டாக்கியிருக்கின்றார். அதிலே நாம் பிரவேசித்து, வலது புறமுமோ, இடது புறமோ சாயாமல் நடப்பதற்கு, சத்திய ஆவியானவரை கொடுத்திருக்கின்றார். எனவே, உலக கவலை கள், ஜீவனத்தின் பெருமைகள் ஒன்றும் உங்களை மேற்கொள்ளாத படிக்கு விழிப்புள்ளவர்களாக இருந்து, உலகத்தினாலும் உண்டாகும் பாரமான அழுத்தத்தினால், சோர்ந்து போகாமல், விசுவாசத்தை தொடக்கின்றவரும் முடிக்கின்றவருமான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி முன்னேறுங்கள்.

**பிலிப்பியர் 3:11**

**அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.**

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நீர் ஏற்படுத்தின செம்மையான வழியை நான் அற்பமாக எண்ணி, நஷ்டமடையாதபடிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மேன்மையானவைகளை பற்றிக் கொள்!

தேவனுடைய ஊழிக்காரனாகிய பவுல், கிறிஸ்து இயேசுவை அறியும் அறிவின் மேன்மைக்காக, இந்த உலகத்திலே வசதிகளையும், செல்வாக்குகளையும் தரக்கூடிய யாவற்றையும் விட்டுவிட்டார். இந்த உலகத்திலே வாழும் கிறிஸ்து இயேசுவை அறியாத சிலரும் அவ்வண்ணமாக தங்களுக்குண்டான யாவற்றையும் துறந்து துறவியானார்கள் என்பதை கேள்விப்பட்டிருக்கின்றோம். அப்படியானால், நம்முடைய மேன்மை என்ன? உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் விட்டுவிடுவது மேன்மை அல்ல. "கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்பட வேண்டும்." கிறிஸ்து இயேசுவை அறியும் அறிவின் மேன்மைக்காக அவரைப் பற்றும் விசுவாசத்திலே நிலைத்திருப்பதே நம்முடைய மேன்மை. ஒருவன் உண்மையாக கிறிஸ்து இயேசுவிலே நிலைத்திருந்தால், அவரு டைய வார்த்தை அவனுக்குள் நிலைத்திருக்கும். அவருடைய வார்த் தையில் அவன் நிலைத்திருப்பதினால், அவன் தன் வாழ்வின் கனிகள் வழியாக கிறிஸ்து இயேசுவை வெளிப்படுத்துவான் சில வேளைகளிலே சில விசுவாசிகள் தங்களிடத்தில் இல்லாதவைகளை குறித்து பேசும் போது, அதிலே தங்களுக்கு நாட்டம் இல்லை என்று ஆணித்தரமாக கூறிக் கொள்வார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசியானவன், அன்றாட மாதாந்தம் தனக்கு கிடைக்கும் சம்பளத்திலே தன் குடும்பத்தின் தேவைகளை சந்தித்து வந்தான். ஐசுவரியத்தைக் குறித்து பேசும் போது, அது அவனித்டதில் இல்லாதிருந்ததால், ஐசுவரியம் மனிதர்களின் மனதை கடினப்படுத்தி, வழிவிலகச் செய்யும் என்று ஆணித்தரமாக பேசிக் கொள்வான். ஆனால், அவனோ கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலே நிலைத்திருக்கவில்லை. தேவ வார்த்தையானது அவனுக்குள் இல்லை. அதனால் என்ன பலன்? "நீயோ, தேவனுடைய மனுஷனே, பண ஆசையை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள் அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்" என்று தேவ ஊழியராகிய பவுல், தீமோத்தேயு என்னும் ஊழியனுக்கு கூறியது போல, நாமும், உலகத்தின் வஞ்சனைக்குள் சிக்கி விழாதபடிக்கு, கிறிஸ்து இயேசுவை பற்றும் மேன்மையானவைகளை நாடித் தேட வேண்டும்.

**1 தீமோத்தேயு 6:12**

விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு

**ஜெபம்**: பரலோக மேன்மைக்காக என்னை அழைத்தவரே, கிறிஸ்து இயேசுவிலே நிலைத்திருந்து, அவரை என் வாழ்விலே வெளிப்படுத்தும், கனி கொடுக்கும் வாழ்க்கை வாழும்படிக்கு என்னை உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.